**செ.வெ.எண் 65** **நாள்: 30.08.2019**

**பெரம்பலூர் மாவட்டம்**

**குடிமராமத்து திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப.., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

**அதன் விவரம் பின்வருமாறு:**

குடிமராமத்து திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப.., அவர்கள் இன்று (30.08.19) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனடிப்படையில் பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் சார்பில் குன்னம் வட்டத்தில் 233.25 ஏக்கர் பாசனபரப்பு கொண்ட ஆய்க்குடி ஏரியில் மேற்க்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் இந்த ஏரி 1,655 மீ நீளமுள்ள கரைகளை கொண்டு, இரண்டு பாசன மதகுகளும் ஒரு கலிங்கும் உள்ளன. அதன்படி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் கரைகளை சீரமைத்தல், கலிங்குப்பகுதியை பலப்படுத்துதல் மற்றும் பாசன மதகுகள் புதிதாக அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன்படி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் புதிதாக அமைக்கப்பட்டு வரும் பாசன மதகின் கட்டுமானப்பணிகளை ஆய்வு செய்து, பணிகளை உயர்ந்த தரத்துடன் மழைக்காலத்திற்கு முன்பாக பணிகளை விரைந்து முடித்து ஏரிகளில் முழு கொள்ளளவில் நீர் சேமிப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று தெரிவித்தார். மேலும் விவசாயிகள் நலனுக்காக தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டுவரும் குடிமராமத்து திட்டத்தின் மூலம் அதிக அளவிலான மழைநீரை சேமிக்க ஏதுவாக வரத்து வாய்க்கால் முழுமையாக சீரமைத்தல், ஆக்கிரமைப்புகளை அகற்றுதல், மற்றும் ஏரிகளின் கரைகளை பலப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை விநைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்..

அதனைத் தொடர்ந்து ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் வேப்பூர் ஒன்றியத்தில் நடைபெற்று வரும் குளம், குட்டைகளை ஆழப்படுத்தி, சீரமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதனடிப்படையில் ஆய்க்குடி ஊராட்சியில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்க்குடி சிறுபாசனக்குளத்தை ஆழப்படுத்தி சீரமைக்கும் பணிகளை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏரிக்கு மழைநீர் செல்லும் வகையில் வரத்து வாய்க்காலை சீர்படுத்தவும், மேலும் குளத்தில் உள்ள கருவேலி மரங்களை அகற்றி, கரைகளை பலப்படுத்தவும் ஊரக வளர்ச்சித்துறை சார்ந்த அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்திரவிட்டார். மேலும் எழுமூர் ஊராட்சியில் ரூ1. இலட்சம் மதிப்பீட்டில் கண்ணாரு ஏரியில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு பணிகளை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், வரத்து வாய்க்காலை முறையாக தூர் வாரவும், மழை நீர் எளிதாக செல்லும் வகையில் கல்வெட்டில் உள்ள புதர் செடிகளை அகற்றவும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் (பொ) திரு.நாகரத்தினம், செயற்பொறியாளர் (பொபது/நீஆது) திரு.தட்சணாமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயற்பொறியாளர் திருமதி.ரோஸ்பின்நிர்மலா, வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.மரியதாஸ், திரு.முரளிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**